சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.25/2024</u>

16.03.2026

வா.சா.1 திருமதி. பரமேஸ்வரி, க/பெ. சிங்காரவடிவேல்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

என்னிடம் இடம் வாங்கி தருவதாக சொல்லி ஏமாற்றிவிட்டதால் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும். வழக்கு தாக்கல் செய்த வழக்கறிஞருக்கு நான்தான் விவரம் சொன்னேன். எனது கணவர் சொன்னாரா என்றால் இல்லை. தாவா சொத்தின் சர்வே எண்83/9. விஸ்தீரணம் 277 குழி. புலஎண் 83/9 ன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் தெரியவில்லை. பிரதிவாதியின் உண்மையான பெயர் பாரூக். பிரதிவாதிக்கு முபாரக் என்ற பெயர் உள்ளதா என்றால் ஆமாம். பிரதிவாதியின் பெயரே தெரியாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதிக்கு சொந்தமானது என்று தான் சொன்னார். தாவா சொத்திற்குண்டான ஆவணங்களை வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. தாவா சொத்து சம்பந்தமாக ஆவணங்கள் எதுவும் பார்க்காமலேயே தவறாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்குண்டான அனைத்து ஆவணங்களையும் பிரதிவாதி ஒப்பந்தம் செய்யும்போதே என்னிடம் கொடுத்துவிட்டார் என்றாலும் நான் உண்மையை மறைத்து அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எனக்கு கொல்லாபுரத்தை சேர்ந்த சீனிவாசனை தெரியுமா என்றால் தெரியும். அவர் மூலமாகதான் கிரய ஒப்பந்தம் எழுதப்பட்டதா என்றால் ஆமாம். கிரய ஒப்பந்தம் எழுதிய பின்னிட்டு சீனிவாசன் பிரதிவாதியிடமிருந்து ரூ.4,00,000/-க்கு ஒரு காசோலையை எனது கணவருக்கு வாங்கி கொடுத்தார் என்றால் சரிதான். அந்த காசோலையை சீனிவாசன் பணமாக்க வங்கியில் செலுத்தி பணமாக்கப்படாததால் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தார் என்றால் சரிதான். பிரதிவாதி பதிலறிவிப்பு கொடுத்தாரா என்றால் கொடுத்தார். எனது கணவர் பிரதிவாதிக்கு ரூ.6,00,00/-க்கு அறிவிப்பு அனுப்பி அதில் ஒரு பகுதியாக ரூ.4,55,000/- கொடுக்க வேண்டும் என அறிவிப்பு அனுப்பினார் என்றால் இல்லை. எனது கணவர் கொடுத்த அறிவிப்பிற்கு பிரதிவாதி பதிலறிவிப்பு கொடுத்துள்ளார் என்றாலும் அதற்கு எனது கணவர் எந்த

நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எனது கணவர் கொடுத்த ரூ.6,00,000/- ஐ பிரதிவாதி இரண்டு தவணைகளில் எனது கணவரிடம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. எனது கணவர் பணத்தை திரும்ப பெற்றுக்கொண்டு வழக்கை மோசடியாக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கிற்காக ஆவணங்களை தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எனக்கு பிரதிவாதியை யாரென்றே தெரியாது என்றால் சரியல்ல. புல எண்.83/9 க்கு பக்கத்தில் எங்களுக்கு வேறு இடம் உள்ளது என்றால் இல்லை. தாவா சொத்தை எனது கணவர் மதிப்பு குறைத்து கேட்டதால்தான் பிரதிவாதிக்கும் எங்களுக்கும் பிரச்னை ஏற்பட்டது என்றால் சரியல்ல. புல எண்.83/9 இடத்தில் ரூ.5,00,000/-க்கு மண் எடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதி படிப்பறிவு இல்லாதவர் என்றாலும் அவரை ஏமாற்றி பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல. பிரதிவாதி விவசாயி என்றாலும் அவரை ஏமாற்றி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல. தாவாபடி பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.